REGD. No. M. 6311 ★ தனி இதழ் 1 அணா ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தினஇதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The official organ of the D.P.F.

மலர் 3] சென்னை: மார்கழி 6உ புதன் (21—12—55) ★ ★ வெளியூர்: மார்கழி 7உ வியாழன் (22—12—55) [இதழ் 162

இந்தியாவுக்கு அமெரிக்கா வழங்கும் இயந்திரச் சாதனங்கள்

புதுடில்லி, டிச. 20—

அமெரிக்க சர்வதேசக் கூட்டுறவு நிர்வாகத்தினர் பலவகையான இயந்திரச் சாமான்கள், சாதனங்கள் வாங்குவதற்காக இந்தியாவிற்கு 2,09,764 டாலர் ஒதுக்கியுள்ளனர் எனத் தெரியவருகிறது.

விவசாய ஆராய்ச்சி, கல்வி விஸ்தரிப்பு, விஞ்ஞான ஆராய்ச்சி முதலியவற்றிற்கான இயந்திரங்களும், மின்கணக்கிடும் இயந்திரங்கள் போன்றவை வாங்குவதற்கும் இந்தத் தொகை பயன்படுத்தப்படுமாம்.

உள் உயர்வு தாழ்வை ஒழித்துப் பார்ப்பனர் ஒன்றுபட வேண்டுமாம்!

பார்ப்பனப் பெண்கள் நாட்டிய-இசைப் பயிற்சியை விட்டொழிக்கவேண்டுமாம்

வடமொழி வேத சாத்திரங் கற்றுத் தேர்ச்சியுற வேண்டுமாம்!

புயல் நிவாரணத்திற்கு பார்ப்பன இளைஞர் சங்கத்தின் தாராள உதவி ரூ. 11

எழுத்தாளர் கி. வா. ஜெகந்நாதன், கே. பாஷ்யம் ஆற்றிய 'வகுப்புவாத' உரை

"பார்ப்பனர்களுக்குள்ளேயே தோன்றியுள்ள பார்ப்பனீயத்தை நாம் வெறுத்து, 'எல்லோரும் பார்ப்பன சமுதாயத்தில் ஒன்று' என்ற எண்ணத்தைக் கொண்டுவிட்டால், பின்பு நம்மை யாரும் குறை சொல்லமாட்டார்கள்,"

என்று, 'கலைமகள்' திங்கள் இதழ் ஆசிரியரான கி. வா. ஜகன்னாதன் மதுரை நகர் பார்ப்பன இளைஞர் சங்கத்தின் இரண்டாவது ஆண்டு விழாவைத் துவக்கிவைத்துப் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

சேதுபதி உயர்நிலைப் பள்ளியில் நடைபெற்ற அந்த விழாவிற்குத் தலைமை தாங்கிய கே. பாஷ்யம் (அய்யங்கார்) எம்.எல்.சி. பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"நாட்டியம் தெரியுமா? பாடத் தெரியுமா? ஆங்கிலம் பேசுவாளா?—என்றெல்லாம் தற்போதைய மணப் பெண்ணைப் பார்த்துக் கேட்கும் வழக்கம் மாறி, பெண்ணுக்கு 'சவமொழி' தெரியுமா?—வேத சாஸ்திரங்கள் தெரியுமா?—என்ற கேள்வியைக் கேட்கும் நிலை ஏற்பட்டுவிட்டால், அப்போதுதான் பார்ப்பன சமூகம் ஒற்றுமையும், முன்னேற்றமும் அடைந்துவிட்டது என்று எண்ணலாம். நாம் அன்றாட வாழ்க்கையிலும், சமூகத்தின் பழக்க வழக்கங்களை மேற்கொள்ள வேண்டும்"

விழாவின் இறுதியில் நிறைவேறிய தீர்மானங்களில் சில:—

தமிழ் நாட்டில் ஏற்பட்ட புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அனுதாபம் தெரிவித்துக் கொள்ளுவதுடன், புயல் நிவாரணத்திற்காக ரூ. 11 நன்கொடை தருவதெனவும் தீர்மானிக்கிறது.

மடாதிபதிகள் அனைவரும் ஒன்றுகூடி மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி மாவட்டங்களில் மதுரையைத் தலைமையாகக் கொண்ட 'விசுவ பரிஷத்' பல்கலைக் கழகத்தை ஏற்படுத்தி, அதில் நாலாம் படிவம் முதற்கொண்டு எம். ஏ., பட்டப் படிப்பு வரை ஆங்கிலம், கணிதம், விஞ்ஞானம், பூகோளம், சரித்திரம், தமிழ் இலக்கியங்கள் முதலியவைகளை சமூக (பார்ப்பன) மாணவர்களுக்கு இலவசமாகக் கற்றுக் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறோம்.

கம்யூனிஸ்டுத் தலைவருக்கு தூக்குத் தண்டனை

தேசத்துரோகக் குற்றம் சாட்டப்பட்டார்

மாஸ்கோ, டிச. 18—

தென் கொரிய கம்யூனிஸ்டுக் கட்சியின் முன்னாள் செயலாளரான பாக்ஹென் என் என்பார், தேசத் துரோகக் குற்றம் புரிந்ததாக வடகொரிய விசேட நீதிமன்றம் ஒன்று அவருக்குத் தூக்குத் தண்டனை விதித்திருப்பதாகச் சோவியத் செய்தி நிறுவனமான 'டாஸ்' அறிவித்திருக்கிறதாம்.

இரண்டாம் யுத்த முடிவில், தென் கொரியாவில் ஆதிக்கம் புரிந்து கொண்டிருந்த அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளின் கட்டளைகளை, பாக்ஹென் என் தீவிரமாக நிறைவேற்றிக்கொண்டிருந்தார் என்றும், அமெரிக்க இரகசிய இலாகா அதிகாரி ஒருவருடன் தொடர்பு கொண்டு தனது கட்சித் தலைவர்களையும், கம்யூனிஸ்டு இளைஞர் கழகத்தையும் காட்டிக்கொடுத்ததாகவும் வடகொரிய செய்தி நிறுவனம் ஒன்று அறிவித்திருப்பதாக 'டாஸ்' கூறுகிறது.

நீலகிரியில் காகிதத் தொழிற்சாலை

புதுடில்லி, டிச. 20—

நீலகிரியின் அடிவாரத்தில் பவானிசாகரில் பத்திரிகைகளுக்கான காகிதம் தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்றைத் துவக்குவது பற்றி சென்னை சர்க்கார் பரிசீலித்துக் கொண்டிருப்பதாகத் தொழில் மந்திரி நித்தியானந்த கனுங்கோ கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் மக்கள் சபையில் தெரிவித்திருக்கிறார்.

'தமிழர்களுக்கு அநீதி இழைக்கப்பட்டிருக்கிறது'

'தேவிகுளம், பீர்மேடு தமிழகத்திற்கே வேண்டும்'

மாநிலங்கள் சபையில் டாக்டர் சுப்பராயன் பேச்சு

புதுடில்லி, டிச. 20—

"மொழி அடிப்படையில் மாநிலங்களைப் பிரித்து அமைப்பது என்றால், நீதி வழங்கப்படவேண்டும்; தேவிகுளம், பீர்மேடு பகுதிகளை சென்னையுடன் இணைக்காதது பெரும் அநீதியாகும்; தேவிகுளம், பீர்மேடு பகுதிகளில் தமிழர்கள்தான் பெருவாரியாக வாழ்கின்றார்கள்; மேலும், அந்தப் பகுதிகள், சென்னையின் பொருளாதார அபிவிருத்திக்கு இன்றியமையாத அம்சங்களாகும்; இந்தப் பகுதிகளில் உள்ள ஆற்று நீரை, கேரள மாநிலத்தவர், நீர்ப்பாசனத்திற்கோ, மின்சார உற்பத்திக்கோ பயன்படுத்த இயலாது; இவற்றிற்காக, சென்னை மாநிலத்தவர் இந்த நீரை உபயோகித்துக் கொள்ளவும் அனுமதிக்க மறுக்கிறார்கள்; இந்தக் காரணங்களால் தேவிகுளம், பீர்மேடு சென்னைக்கு உடனே மாற்றப்படவேண்டும்; மேலும், கூடலூர் தாலுகாவும் சென்னையிலேயே இருக்கவேண்டும்,"

—என்று டெல்லி மாநிலங்கள் சபையில் பேசிய டாக்டர் சுப்பராயன் குறிப்பிட்டிருக்கிறார்.

மேலும், அவர் 'மொழிவழிக் கோரிக்கையை எழுப்பும்போது, இந்தியாவின் ஒற்றுமையை மறந்துவிடக் கூடாது; இந்தியாவை நான்கு அல்லது ஐந்து துண்டுகளாக மட்டும் பிரித்து அவற்றை மத்திய சர்க்காருடன் இணைத்துவிடவேண்டும் என்ற கோரிக்கை வரவேற்கத்தக்கதே; ஆனால், இது காலங்கடந்தயோசனையாகும்,' என்றும் குறிப்பிட்டிருக்கிறார்.

'மசோதா'வை எதிர்த்து கடையடைப்பு

லேவாதேவிக்காரர் முடிவு

18—12—55ல், மதுரையில் நடைபெற்ற சென்னை மாநில லேவாதேவிக்காரர் மாநாட்டில், 'லேவாதேவிக்காரர் மசோதா'வுக்கு எதிர்ப்புத் தெரிவிப்பதற்காக டிச. 28, 29-ந் தேதிகளில் எல்லா லேவாதேவி, அடகுக் கடைகளை மூடிவிட வேண்டுமென்றும், இந்நாட்களில் லேவாதேவிக்காரர்கள் (கடன் கொடுப்போர்) எவ்விதம் பேரமும் செய்யக் கூடாதென்றும் தீர்மானத்தின் மூலம் முடிவு செய்துள்ளனர்.

வெளிநாடுகளில் இந்தியத் தூதுவர் அலுவலகங்கள்

பல இலட்சம் ரூபாய் செலவில் மாளிகைகள்

மக்கள் சபையில் பண்டித நேரு தரும் தகவல்

"பல்வேறு நாடுகளிலும் உள்ள இந்தியத் தூதுவராலுவலகங்களில் 17 அலுவலகங்களுக்கு அந்த அந்த நாடுகளிலேயே இந்தியப் பேரரசு சொந்தக் கட்டிடம் வாங்கியிருக்கிறது. மேலும் 25 நாடுகளில் அத்தகு கட்டிடங்கள் வாங்குவதற்கோ அல்லது புதிய கட்டிடங்கள் எழுப்புவதற்கோ இந்திய சர்க்கார் திட்டங்கள் தயாரித்து வருகிறது,"

என்று, பிரதமர் நேரு, மக்கள் சபையில் தெரிவித்திருக்கிறார்.

"ஜகார்தாவில் உள்ள இந்தியத் தூதுவர் குடியிருப்பதற்காக ரூ. 6,44,531 கொடுத்து ஒரு மாளிகை வாங்கப்பட்டிருக்கிறது;

கராச்சியில் தூதுவராலுவலகத்திற்கு மாளிகை அமைப்பதற்காக நிலம் ஒன்று ரூ. 2,65,000 (பாகிஸ்தான் ரூபாய்) செலவில் வாங்கப்பட்டிருக்கிறது;

"நேபாளத் தலைநகர் காட்மண்டுவில் இந்தியத் தூதுவராலுவலக ஊழியர்கள் குடியிருப்பதற்காக ரூ. 2,65,000 ஒதுக்கப்பட்டிருக்கிறது,"

என்ற தகவல்களையும் பிரதமர் நேரு தந்திருக்கிறார்.

புதுவை இணைப்பு எதிரொலி

மடகாஸ்கர் 'இந்தியர்கள்' கொடுமைப்படுத்தப்படுகின்றனர்?

மக்கள் சபையில் பிரதமர் நேரு தகவல்

"மடகாஸ்கரில் உள்ள இந்தியர்கள் (பெரும்பாலும் தமிழர்கள்?)—குறிப்பாக பாண்டிச்சேரி இந்தியாவுடன் இணைக்கப்பட்ட பிறகு கொடுமைப்படுத்தப்படுகிறார்கள்; சில இந்தியர்கள் கைது செய்யப்பட்டு சிறை வைக்கப்பட்டிருப்பது குறித்தும் தகவல்கள் கிடைத்திருக்கின்றன,"

என்று பிரதமர் நேரு, மக்கள் சபையில் கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் தெரிவித்திருக்கிறார்.

"மடகாஸ்கரிலிருந்து ஏராளமான இந்தியர்கள் வெளியேற்றப்பட்டு வருகிறார்கள்; ஆனால், அவர்களில் எவரும் தங்கள் குடும்பத்தாரை அழைத்துச் செல்லவும், சொத்துக்களை எடுத்துக்கொண்டு செல்லவும் அதிகாரிகள் மறுத்ததாக இந்திய சர்க்காருக்குத் தகவல் இல்லை; வெளியேற்றப்படும் ஒருவர் 5 இலட்சம் 'பிராங்கு'கள் (சுமார் ரூ. 14,000) எடுத்துக்கொண்டு வரலாம் என்றும், மடகாஸ்கரில் தனக்குச் சொந்தமானது என்ற சொத்துக்களிருந்தால் அவற்றிலிருந்து கிடைக்கும் வருமானத்தைப் பெற்றுக்கொள்ளவும் வசதி அளிக்கப்படுகிறது," என்றும் பிரதமர் நேரு தகவல் தந்திருக்கிறார்.

ஐ. நா. பாதுகாப்புச் சபைக்கு யுகோஸ்லாவியா தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறது. 36-வது தடவையாக நடைபெற்ற இந்த ஓட்டெடுப்பில் யுகோஸ்லாவியாவுக்கு ஆதரவாக 43 ஓட்டுகளும் எதிராக 11 ஓட்டுகளும் கிடைத்தன.

குமரிமுனை கேரளத்தில் இல்லாதது வருத்தந் தருகிறதாம்!

திருவனந்தபுரம், டிச. 20—

"உத்தேசிக்கப்பட்டுள்ள கேரள மாநிலத்தில் கன்னியாகுமரி இல்லாதுபோவதால் வருந்துவதாக ரஷ்யாவில் இந்தியாவின் தூதுவராயிருக்கும் கே. பி. எஸ் மேனன் இங்கு கூறினார்.

மாநில புது அமைப்பு குறித்து கருத்தறிவிக்குமாறு கேட்டபோது அவர், இந்தியா இப்போது மிக முக்கியமாகப் பொருளாதாரப் பிரச்சினைகளிலேயே கவனம் செலுத்த வேண்டும் என்பதால், புது அமைப்பு சில காலம் பொறுத்து நடைபெறலாம் என்று தாம் கருதுவதாக அறிவித்திருக்கிறார்.

'இந்தியா இப்போதுதான் தன்னைச் சீர்செய்துகொள்ளும் பணியின் துவக்கத்திலிருக்கிறது; இதிலிருந்து மக்களின் கவனத்தை வேறு பக்கம் திருப்பும் எதுவும் தீயவிளைவுகளைக் கொண்டதாகவே இருக்கும்,' என்றும் அவர் கூறியுள்ளார்.

நம் நாடு
தி.மு.க. தின இதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்
சென்னை 21-12-'55 புதன்

சர்க்காருக்கு நினைப்பூட்டுகிறோம்!

★

திராவிடத்தின் — தமிழகத்தின் தென் மாவட்டங்களான தஞ்சை, திருச்சி, இராமநாதபுரம், மதுரை மாவட்டங்கள் கடும் புயலாலும், பெருமழையாலும், கட்டுங்கடங்காத வெள்ளத்தாலும் தாக்கப்பட்டு, பெரும் அழிவிற்கும் பேரிழப்புக்கும் ஆளாகித்தவிக்கின்றன.

இழந்த செல்வங்களை ஈடு செய்யவும், இடிந்த வீடுகளை எடுத்துக் கட்டவும், அழிந்த வயல்களைச் சீர் செய்யவும், இனி எத்தனை காலம் ஆகுமோ என்று மக்கள் வருந்துகின்றனர்; வாழும் வகைகளைப் பறிகொடுத்துவிட்ட சோகம் தாளாது தேம்பியழுகின்றனர்.

'ஏற்பட்டுள்ள சேதாரங்களை ஈடுசெய்து, பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்குவதில் சென்னை மாநில சர்க்கார்—குறிப்பாக முதலமைச்சர் காமராசர் தீவிரமாகக் கவனம் செலுத்திக் காரியமாற்றி வருவது குறித்து மகிழ்ச்சி தரத்தக்கதாயிருக்கிறது,' என்று, சில நாட்களுக்கு முன்பு குறிப்பிட்டிருந்தோம்.

பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு விரைந்து சென்று, அல்லலுறுவோருக்கு ஆறுதல் கூறுவது ஒரு முதலமைச்சரின் கடமை என்பதால், கடமை உணர்ந்து காரியமாற்றும் காமராசர் பாராட்டுதலுக்குரியவர் என்பதில் ஐயமில்லைதான். ஆனால், பாதிக்கப்பட்ட பகுதிகளில் சுற்றுப் பயணம் செய்து திரும்பியுள்ள தி. மு. கழகப் பொதுச்செயலாளர், நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையை சர்க்காரின் கவனத்திற்குக் கொண்டுவர விழைகிறோம்.

"முழுக்க முழுக்க போற்றுவதற்குரியவர்கள் என்று கூற முடியாவிட்டாலும், அரசாங்க அதிகாரிகள், சிற்றளவு நிவாரண நடவடிக்கைகளில் அக்கரை காட்ட முனைந்திருக்கிறார்கள் என்றுதான் சொல்ல வேண்டும். பொதுமக்கள் தமிழகமெங்கணும் இருந்து திரட்டி அனுப்பி வைக்கும் பணம், உணவு, உடை; பொருள்கள் ஆகியவை, பாதிக்கப்பட்ட ஏழை எளிய பாட்டாளி மக்களுக்குச் சரியானபடி கிடைக்குமா, அல்லது, இடையேயுள்ள அதிகாரிகளால் மறைக்கப்பட்டு பறிக்கப்பட்டுவிடமுடியுமோ என்ற ஐயப்பாடு பல இடங்களிலும் நிலவி வருகிறது. இந்த ஐயப்பாட்டை நல்ல முறையில் நீக்கும் வகையில், அரசாங்க அதிகாரிகள் நடந்துகொள்ள வேண்டியவர்களாயிருக்கிறார்கள்,"

என்று பொதுச் செயலாளர் அறிக்கையின் ஒரு பகுதியில் காணப்படுவதை சர்க்கார் தீவிரமாகக் கவனித்தாக வேண்டும். இத்தகு ஐயப்பாடு மக்களிடத்தில் அதுவும் வாழ்விழந்து தவிக்கும் நிலையில் தோன்றியிருப்பதற்கு, அவர்களது கடந்த கால அனுபவங்கள் காரணமாயிருக்கக்கூடும் என்பதால், சர்க்கார் இப்போது விழிப்புடனிருப்பது அவசியமானதாகும்.

சேதங்களுக்கு ஆளான மக்களுக்கு வீடு கட்டிக் கொள்ளுவதற்கென்று சர்க்கார் வழங்கும் அதிகபட்ச உதவித் தொகை முப்பது ரூபாய் போதுமானதல்ல — என்று கருதுகிறார் பொதுச்செயலாளர். இந்த இதழில் வேறோர் இடத்தில், இந்த உதவித் தொகை வழங்குவது பற்றி 'ஒரு அரசாங்க ஊழியர்' எழுதியுள்ள கடிதம் ஊன்றி நோக்கற்பாலது.

முப்பது ரூபாய் தருவதாக வாக்களித்துவிட்டு, பின்னர், பதினைந்து ரூபாய்தான் என்று உத்தரவிடுவதும், 'சொல் வேறு செயல் வேறு' என்ற வழக்கமான தனது போக்கையே இந்த ஒரு நெருக்கடி நேரத்திலும் சர்க்கார் பின்பற்றுவது கண்டனத்திற்குரியதுதான்.

நெருக்கடியும், தாக்குதலும், கொடுமையும் நிகழ்ந்த சின்னாட்களுக்கு மட்டும் ஆடி ஓடி, ஆகவேண்டிய காரியத்தைக் கவனிப்பதும், பின்னர், நிவாரண வேலைகள் முடியும் முன்பே சோர்ந்துவிடுவதும், வாக்குறுதிகளை அவமதிப்பதும், அவதிக்காளான மக்களின் வெந்த நெஞ்சத்தில் வேல் பாய்ச்சுவதாகத்தான் இருக்க முடியும்.

இப்போது ஏற்பட்டிருப்பதைப் போன்ற இயற்கைக் கொடுமையின் விளைவுகளைத் தாங்கிக்கொள்வதே பெரும் கஷ்டம். அந்த வேதனை மிகுந்த விளைவுகளிலிருந்து மீளுவதற்கு சில நாள் நடவடிக்கைகள் மட்டும் போதுமானதல்ல; விழுந்தவன் எழுந்து நடக்க ஊன்றுகோலேனும் தராவிட்டால், அவனுக்கு ஆறுதல் மொழி கூறுவதே உதவியாகிவிட முடியாது. உருவான உதவி—அதுவும் உடனடியாகத் தரப்படவேண்டும் என்பதை சர்க்காருக்கு நினைப்பூட்ட விரும்புகிறோம்.

இதற்கிடையில், கழகத் தோழர்கள், பொதுச்செயலாளர் அறிக்கைக்கு ஒப்ப, தொடர்ந்து தீவிரமாக நிவாரணம் திரட்டி அளிக்கும் பணியில் ஈடுபட வேண்டுகிறோம்.

வெந்த புண்ணில் வேல் பாய்ச்ச வேண்டாம்!

செத்துவிட்ட 'தட்சிணப் பிரதேசக்' கோரிக்கைக்கு உயிர் ஊட்ட வேண்டாம்!

பண்டித பந்தின் விஷமத்தனம்

புதுடில்லி, டிச. 19—

"ஒரு தென் மாநிலம் அமைய வேண்டும் என்ற கோரிக்கையை நான் வரவேற்கிறேன்; சென்னை, திரு-கோச்சி முதன் மந்திரிகள் அந்தக் கோரிக்கைக்கு இணக்கம் தெரிவிப்பதுடன் அது ஈடேற ஆதரவும் தருவார்கள் என்று நான் நம்புகிறேன்,"

என்று இந்தியப் பேரரசின் உள்நாட்டமைச்சர் பண்டித பந்த் தெரிவித்திருக்கிறாராம்.

திரு-கொச்சியில் உள்ள தேவிகுளம், பீர்மேடு தமிழகத்துடன் இணைய வேண்டும் என்று வற்புறுத்துவதற்காகத் தன்னைச் சந்தித்த தமிழர் தூதுக் குழு ஒன்றிடம் இந்தக் கருத்தை அவர் தெரிவித்தாராம்.

அத்துடன், தூதுக் குழுவினர் திரு-கொச்சி—சென்னை மந்திரிகளைக் கொண்டு கோரிக்கையை தம்முன் வைக்க முயற்சிக்க வேண்டும் என்றும் கோரினாராம்!

தோழர்கள் எஸ். வி. இராமசாமி, பி. டி. தாணுப்பிள்ளை, சங்கர பாண்டியன், சக்தி வடிவேலு (கவுண்டர்) சி. இராமசாமி (முதலியார்) ஆகியோர்தான் தூது சென்றிருக்கின்றனர்.

5,50,000 சைக்கிள் உற்பத்தியாம்!

இந்தியாவில், இவ்வாண்டில் மொத்தம் 5,50,000 சைக்கிள்கள் உற்பத்தி செய்யப்படுமாம்.

தற்போது ஆண்டிற்கு சுமார் 6,50,000 சைக்கிள்கள் தேவைப்படுகின்றன என்றும், இவ்வாண்டில் 1,00,000 சைக்கிள்கள் இறக்குமதி செய்யப்படுமென்று எதிர்பார்க்கப்படுவதாகவும மாநிலங்கள் சபையில் கூறப்பட்டுள்ளது.

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட இறுதியில் ஆண்டு ஒன்றுக்கு 125 இலட்சம் சைக்கிள்கள் வீதம் உற்பத்தி செய்ய உத்தேசித்திருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

'புதிய மதோபாக்கியானம்'

சேலம், டிச. 18—

"இந்து, வேதாந்த, புத்த, மதத் தத்துவசாரங்களின் கூட்டுக் கலவைதான், நமது எதிர்கால மதத் தத்துவமாக இருக்க முடியும்; 'சிந்தனைத் தலைவர்கள்' என்று, இன்று நம்மை வெளிநாட்டவர் மதிக்கின்றனர்; எனவே, எதிர்காலத்தில் எதனை நமது மதமாக நாம் ஏற்றுக்கொள்கிறோமோ அதனை ஏற்றுக்கொள்வது தவிர்க்க முடியாததாயிருக்கும்,"

—என்று, பம்பாயைச் சேர்ந்த சதானந்த சரஸ்வதி என்ற சாமியார் அகில இந்திய மதம் பரப்பும் மாநாடு ஒன்றில் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

'தீண்டாமை ஒழிய சட்டம் மட்டும் உதவாது'

'மக்கள் ஒத்துழைப்புவேண்டும்'

பண்டித பந்த் கருத்து

புதுடில்லி—

"சட்டங்கள் மட்டும் தீண்டாமையை ஒழித்துவிட முடியாது. மக்களின் ஒத்துழைப்புத்தான் அந்தத் தீமையை அகற்ற உதவக் கூடியதாகும்.

"தாழ்த்தப்பட்டவர்களிடையே கூட தீண்டாமை நிலவுகிறது; இதனை ஒழிக்க, தாழ்த்தப்பட்டோரும் முன்வரவேண்டும். சர்க்கார் வழங்குகிற சலுகைகளை முழுவதுமாகப் பயன்படுத்திக் கொண்டு, கல்வி கற்க முன்வரவேண்டும். சர்க்கார் உத்தியோகங்களில் தாழ்த்தப்பட்டவர்களுக்கென ஒதுக்கப்படும் இடங்களுக்கு சரியான ஆட்கள் கிடைக்காத குறை இன்னும் நீடித்துக் கொண்டிருக்கிறது,"

என்று, மத்திய சர்க்கார் உள்நாட்டமைச்சர் பண்டித பந்த், தாழ்த்தப்பட்டோர் சிக்கல்கள் குறித்து விவாதிப்பதற்காக என்று ஏற்பாடு செய்யப்பட்ட விவாத அரங்கு ஒன்றில் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

அந்த விழாவில் கலந்துகொண்ட மக்கள் சபைத் தலைவரான மாவலங்கர் 'தாழ்த்தப்பட்டவர்கள், சாதி இந்துக்களை தங்கள் விரோதிகள் என்று எண்ணக் கூடாது—நண்பர்களாக — சோதரர்களாகக் கருதிப் பழகவேண்டும்' என்று குறிப்பிட்டிருக்கிறார்.

உலகிலேயே மிகத் 'துல்லிய'மான கடிகாரம்!

கோபன்ஹேகன், டிச. 19—

உலகத்திலேயே மிகவும் துல்லியமாகக் காலம் காட்டும் கடிகாரம் ஒன்றை, டென்மார்க் மன்னரான பிரெடரிக், கடந்த கிழமையில் இயக்கியுள்ளார்.

இந்தக் கடிகாரத்தை அமைப்பதற்காக, ஒரு ஏழைத் தொழிலாளி 30 ஆண்டுகள் கஷ்டப்பட்டிருக்கிறார்.

(தொடர்ச்சி 5-ம் கலம் பார்க்க)

வரி விதிப்பைத் தடுக்க வருமானத்தை மறைத்தோர்!

விசாரணைக்குழு ரூ.26 கோடி வரி விதித்துள்ளது

புதுடில்லி, டிச. 19—

"வருமான வரி விதிப்பிற்கு இலக்காகாது மறைத்து வைக்கப்பட்டிருந்த வருமானத்திற்கு, வருமான வரி விசாரணைக் குழுவின் முயற்சியினால் ரூ 26 கோடி வரை வரி விதிக்கப்பட்டிருக்கிறது,"

என்ற தகவலை ரெவினியூ மந்திரி எம். சி. ஷா, மக்கள் சபையில் கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் தெரிவித்திருக்கிறார்.

தென்னாட்டு-வடநாட்டு மொழிகள் சந்திக்குமிடம்

ஐதராபாத், டிச. 18—

"ஐதராபாத்தில் பல்கலைக் கழகக் கல்வி அளிப்பதிலும், நிர்வாகத் துறையிலும் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைகளும், அவற்றில் பெற்ற அனுபவங்களும் இன்று எழுந்துள்ள மொழிச் சிக்கலைத் தவிர்ப்பதற்கு உபயோகப்படத்தக்கதாயிருக்க வேண்டும்,"

என்று, ஆட்சி மொழிக் குழுத் தலைவரான பி. ஜி. கேர் இங்கு பத்திரிகையாளரிடைக் குறிப்பிட்டிருக்கிறார்.

"மொழித் துறையில் ஐதராபாத் பூகோள ரீதியாகவும், சரித்திர ரீதியாகவும் ஒரு முக்கியமான இடத்தைப் பெற்றிருக்கிறது; அது, தென்னாட்டு வடநாட்டு மொழிகள் பலவும் சந்திக்கும் ஒரு இடமாக இருந்து வருகிறது,"

என்றும் அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

(2-ம் கலத்தின் தொடர்ச்சி.)

கோபன்ஹேகன் நகர் மண்டபத்தில் அமைக்கப்பட்டிருக்கும் இந்தக் கடிகாரம், 300 ஆண்டுகளில் ஒரு வினாடியில் ஐந்தில் இரு பகுதி நேரத்தை மட்டுமே இழக்குமாம்!

இதுவரையில் 'உலகக் கடிகாரம்' என்று அழைக்கப்பட்டு வந்த பிரான்ஸ் நாட்டு ஸ்ட்ராஸ்பர்க் தேவாலயக் கடிகாரம், 100 ஆண்டுகளில் எட்டு வினாடிகள் இழந்துவிடுமாம்.

1897-ம் ஆண்டில், இந்தப் பிரான்ஸ் நாட்டுக் கடிகாரத்தைக் கண்ணுற்றபோதுதான், ஜென்ஸ் ஆல்சென் என்ற டென்மார்க் தொழிலாளருக்கு இதை விடத் துல்லியமான கடிகாரம் ஒன்றைச் செய்யவேண்டும் என்று தோன்றிற்றாம்.

அதற்காக தன் வாழ்நாளில் 30 ஆண்டுகளைச் செலவிட்டாராம்; ஆனால், தன் முயற்சி கைகூடும் முன்பே அவர் 1945-ல் இறந்துவிட்டார். அவர் விட்டுச் சென்ற வேலையை கோபன்ஹேகன் நகர 'கவுன்சில்' தொடர்ந்து மேற்கொண்டது; இப்போது சுமார் ரூ 50,000 செலவில் அந்தக் கடிகாரத்தைச் செய்து முடித்துவிட்டது.

இந்தக் கடிகாரத்தில் சுமார் 15,000 பாகங்கள் அனைத்தும், இயந்திர உதவியின்றி கையினால் செய்யப்பட்டவை; மேலும் 445 சக்கரங்கள் வேறு உள்ளன. மிக மெதுவாக நகரும சக்கரம் ஒன்று, ஒருமுறை சுற்றிவர 26,000 ஆண்டுகள் பிடிக்குமாம். எனவே, இந்தச் சக்கரத்தின் கால் பகுதியை மட்டும் இப்போது கடிகாரத்தில் இணைத்திருக்கிறார்களாம்; இது, ஆறாயிரம ஆண்டுகளுக்குப் போதுமானதாம்!

இந்தக் கடிகாரம் உலகம் முழுவதற்குமான மணி, வான மண்டல ஓட்டங்கள், சூரிய சந்திர 'கிரகணங்கள்,' நட்சத்திரங்களின் நிலைகள், துருவங்களின் இயக்கங்கள் இவற்றை எல்லாம் காட்டக்கூடியதாம்.

பல்கலைக் கழகங்களில் இந்தி போதன மொழியாக வேண்டுமாம்!

அதனால் வட்டார மொழி வளர்ச்சி குன்றாதாம்

செதல்வாட் கூற்று

நாகபுரி, டிச. 19—

"வட்டார மொழிகள் மட்டுமே பல்கலைக் கழகங்களில் போதன மொழியாக இருக்கவேண்டும் என்று மாநிலங்களோ மக்களோ எண்ணுவார்களேயானால் அது தற்கொலைக்கு ஒப்பாகும்.

"இந்தியைப் பல்கலைக் கழகங்களில் போதன மொழியாக ஏற்றுக்கொள்வதுதான் சிறந்தது. இந்தியை அப்படிப் போதன மொழியாக ஏற்றுக்கொள்வது வட்டார மொழிகளின் வளர்ச்சியைப் பாதிக்கும் என்ற அச்சத்திற்கு ஆதாரமே இல்லை.

"வளர்ந்துவரும் இளைஞர் சமுதாயம்தான் இந்த மொழிச் சிக்கல் குறித்து ஆழ்ந்து சிந்தித்து, வட்டார நலன்களுக்காக இல்லாது, இந்தியா முழுமைக்குமான நலன்களுக்கு உகந்த வகையில், எதிர்காலக் கொள்கைகளை உருவாக்க வேண்டும்,"

—என்று, நாகபுரி பல்கலைக் கழகத்தின் 85-வது பட்டமளிப்பு விழாவில் பேசுகையில், இந்தியாவின் அட்டார்னி-ஜெனரலான எம். சி. செதல்வாட் கூறினாராம்.

ஜனவரி 30: தியாகிகள் தினம்

புதுடில்லி, டிச 19—
இந்தியச் சுதந்திரப் போரில் ஈடு பட்டு தியாகிகளானோருக்கு வீர வணக்கம் செலுத்தும் நாளாக ஜனவரி 30-ந் தேதி கொண்டாடப்படும் என்று தெரியவருகிறது.
அன்று இரண்டு குண்டுகள் வெடிக்கப்பட்டவுடன் அனைவரும் ஒரு நிமிட நேரம் மௌனம் கடைப்பிடிக்க வேண்டும்.

தாமதமாகவந்த மந்திரி

மக்கள் சபையில் மன்னிப்பு கோரினர்

புதுடில்லி, டிச. 19—
பாதுகாப்புத் துறை அமைச்சரவை பதிலளிக்கவேண்டியகேள்வி ஒன்று மக்கள் சபையில் வந்தது. சபைத் தலைவர் பாதுகாப்புத் துறையினரைக் கூப்பிட்டு பதில் அளிக்கக் கூறினர்; ஆனல் அத்துறையைச் சேர்ந்த எவருமே சபையில் இருக்கவில்லை.
உடனே சபைத் தலைவர், 'அந்த அமைச்சரவை சார்பில் எவருமே இல்லாதிருப்பது மிகத்தவருனது' என்று குறிப்பிட்டிருக்கிருர்.
பின்னர், துணைத் தற்காப்புத் துறை அமைச்சரான சர்தார் சர்ஜீத் சிங் மஜ்தியா சபைக்குத தாமதமாக வந்தார் அதற்காகச் சபையில் அவர் மன்னிப்புக் கோரினர். பிறகு கப்பற்படை தலைமை நிலையத் திருத்த அமைப்புக் குறித்து கேள்விக்குப் பதில் தந்திருக்கிருர்.

தெரியுமா?

மனித இரத்தத்தில் சிவப்பு உயிரணுக்களும், வெள்ளை உயிரணுக்களும் இருக்கின்றன; அவை ஒவ்வொன்றின் குறுக்களவு ஒரு அங்குலத்தில் 25,000-ல் ஒரு பங்கு இருக்கும். ஒரு கன அங்குல இரத்தத்தில் 82,00,00 00,000 சிவப்பு அணுக்களும், 16,40,00,000 - வெள்ளை அணுக்களும் உள்ளனவாம்.

புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வாழ்க்கைவசதிக் கடனும்!

20 ஆண்டுத் தவணையில் வசூலிக்கப்படுமாம்!

சென்னை, டிச. 20—
சென்னை அமைச்சர்களும், அதிகாரிகளும் கலந்துகொண்ட உயர் வட்டாரப் பேச்சு ஒன்று நடைபெற்றுள்ளது; புயலால் பாதிக்கப்பட்ட பகுதி மக்களுக்கு எவ்விதத்தில் உதவிகளை மேற்கொள்ளுவது என்பது பற்றி ஆலோசனைகள் மேற்கொள்ளப்பட்டது.
புயல் வீசிய பகுதிகளில் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகளுக்கும், பிறருக்கும் உயர்ந்தபட்சமாக ரூ. 300 வரை வாழ்க்கை வசதிக் கடனாக அளிப்பதெனவும், இக்கடனை 20 ஆண்டுத் தவணைகளில் திரும்பப் பெறுவதென்றும் முடிவுகள் மேற்கொள்ளப்பட்டதாம்
தறிகளை இழந்துவிட்ட நெசவாளர்கள் புதுத் தறிகள் வாங்கிக் கொள்ளுவதற்குத் தலா ரூ. 50 அதிகபட்சமாகக் கடன் கொடுப்பதெனவும் முடிவு செய்யப்பட்டதாம்; இந்தக் கடன் 5 ஆண்டுத் தவணைகளில் திரும்பப் பெறப்படுமாம்

2,000 சிமெண்ட் தொழிலாளர்கள் வேலைநிறுத்தம்

டால்மியா நிர்வாகப் போக்கை எதிர்த்து நடவடிக்கை

கல்லக்குடி, டிச. 19—
இவ்வூரில் உள்ள டால்மியா சிமெண்ட் தொழிற்சாலையைச் சேர்ந்த 2,000 தொழிலாளர்கள் இன்று காலை முதல் வேலைநிறுத்தம் துவங்கியுள்ளனர்.
சுமார் 150 தொழிலாளர்களை நிர்வாகத்தினர், முன் அறிவிப்பின்றி வேலையிலிருந்து தற்காலிகமாக நீக்கியதை எதிர்த்துத்தான் 2,000 தொழிலாளர்களும் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டிருக்கின்றனர்.
இதுகண்டு ஆத்திரம்கொண்ட நிர்வாகிகள், அவர்கள் அத்தனை பேரையும், தற்காலிகமாக வேலையிலிருந்து நீக்கியிருப்பதாக உத்தரவு பிறப்பித்திருக்கின்றனர்.
தொழிலாளர்களுக்கு ஆதரவாக குமாஸ்தாக்களும், இதர அதிகாரிகளும்கூட வேலைக்குச் செல்லாதிருக்கின்றனர்.
ஒருசில பார்ப்பன குமாஸ்தாக்கள் மட்டுமே வேலைக்குச் சென்றனர்.
தொழிலாளர்கள் இறுதிவரை போராட உறுதிபூண்டிருக்கின்றனர். (ந. நி.)

எவ்வளவு தெரியுமா?

இந்தியாவிலுள்ள மூன்று எண்ணெய் சுத்திகரிப்பு கம்பெனிகள், மொத்தம் 14 கோடி ரூபாய்க்கு 'டிபெஞ்சர்கள்' வெளியிட்டிருக்கிறதாம்.
இத்தொகையில் 4 44,40 000 ரூபாய்மதிப்புள்ள 'டிபெஞ்சர்களை' பொது மக்களும், பாக்கி 'டிபெஞ்சர்'களை நிறுவனங்களில் மூலதனம் செய்துள்ளவர்களும் வாங்கியிருக்கின்றனர் என்றும், அவைகளுக்கு ஆண்டிற்கு $5\frac{1}{4}$ சத விகிதம் வட்டி கொடுக்கப்படுவதாகவும் மாநிலங்கள் சபையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
இந்தியாவில் நடப்பு நிதி ஆண்டில் 1955 செப்டம்பருடன் முடிவடைந்த முதல் ஆறு மாத காலத்தில் 680 புதிய நிறுவனங்கள் பதிவு செய்யப்பட்டிருக்கிறதாம். இவைகளின் அங்கீகரிக்கப்பட்ட மூலதனம் ரூ. 67 6 கோடியாம்.
1955 செப்டம்பருடன் முடிவடைந்த ஆறு மாத காலத்தில், மொத்தம் ரூ 42 கோடி செலுத்தப்பட்ட மூலதனம் கொண்ட 370 நிறுவனங்கள் கலைக்கப்பட்டதாம்!

ஓநாய், நாய் ஆகியவைகளின் நச்சுக் கடியிலிருந்து, மக்களின் உயிரைக் காப்பாற்றுவதற்குப் புது வகை மருந்தொன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாம்; அது ஒரு ஊசி மருந்தென்றும், பலன் வெற்றி தருவதாக உள்ளதென்றும் செய்தி ஒன்று கூறுகிறது.

கழகத் தோழர்களின் தளர்விலா முயற்சி

சென்னை 16-வது வட்ட தி. மு. கழகம்

18—12—55 காலை 9 மணிக்கு, அண்ணா பிள்ளைத் தெருவிலிருந்து அப்பகுதியிலுள்ள பலவேறு கழகங்கள், சங்கங்களைச் சேர்ந்த தோழர்களுடன் ஊர்வலமாகப் புறப்பட்டுச் சென்று, மாலை 4 மணி வரையில் உண்டியல் மூலம் ரூ - 95; 2 அரிசி மூட்டை; 1 057 - துணி உருப்படிகள் திரட்டினர்.
கலைவளர் மன்றம், தி. மு கழகம், தேசீய சீர்திருத்த வாலிபர் சங்கம், காந்திஜி தேசிய வாலிபர் சங்கம், ஆந்திர பாரதி அரிஜன சங்கம், திருவள்ளுவர் முன்னேற்றக் கழகம், காந்திஜி சிறுவர் ஆரம்பக் கல்விச் சாலை ஆகியவைகள், இம்முயற்சியில் பெரும் பங்கேற்றன.

டாக்டர் சி. நடேசன் மன்றம்—சேப்பாக்கம்

11—12—55ல், மேற்படி மன்ற உறுப்பினர்கள், சேப்பாக்கத்தில் வீடு வீடாகச் சென்று, உண்டியல் மூலம் ரூ 47—10—0; பழைய துணிகள் 204; 21 படி அரிசி திரட்டினர்.
வசூலித்த பணத்திற்கு கைத்தறி வேட்டிகள் (ரூ 49—4—0க்கு) வாங்கி, அத்துடன் பழைய துணிகளையும், அரிசியையும் 19-12-55ல் தஞ்சை மாவட்ட கலெக்டருக்கு அனுப்பப்பட்டது

சிதம்பரம்

14, 15—12—55ந் தேதிகளில், புயல் நிவாரண நிதிக்காக பழைய நல்லூர், அகரநல்லூர், சாலியன் தோப்பு, கண்டியாமேடு, வையூர், கடவாச்சேரி, பிள்ளை முத்தா பிள்ளை சாவடி முதலிய ஊர்களுக்கு தோழர் பாலகுருசாமி உள்ளிட்ட தோழர்கள் பலர் சென்று, 4 கலம் அரிசி, 400 துணி உருப்படிகள், உண்டியல் — நன்கொடை மூலம் ரூ 35-ம் திரட்டி, தஞ்சை மாவட்டத்திற்கு 1 மூட்டை அரிசியும், 200 துணி உருப்படிகளும், இராமநாதபுரம் மாவட்டத்திற்கு 1 - மூட்டை அரிசியும், 200 துணி உருப்படிகளும், தொகையில் அதன் செலவு நீக்கி மாவட்டத்திற்கு ரூ 15 ஆகவும் அனுப்பப்பட்டது

அம்மாசத்திரம்

இவ்வூர் தி. மு. க. கிளையின் சார்பில, அம்மாசத்திரம், புள்ளையாம்பேட்டை, நடுவக்கரை ஆகிய ஊர் கிராம மக்களிடம் புயல் நிவாரண நிதிக்காக ஒரு மூட்டை அரிசி சேகரித்து அனுப்பப்பட்டுள்ளது.

இலங்கை

14—12—55ல், இராமநாதபுரம் மாவட்டம் செல்வரசன்கோட்டை. தாழ்த்தப்பட்டோர் சம்மேளனத்தின் அவசரப் பொதுக்கூட்டம் கொள்ளுப்பட்டி காலி வீதி, 510/4 எண் இல்லத்தில், தலைவர் திரு அ.ச. வேல் தலைமையில் நடைபெற்றபோது, தமிழகத்திலும், ஈழத்திலும் புயல் - வெள்ளத்தால் பாதிக்கப்பட்டோர் அல்லல் பற்றித் தோழர்கள் பலர் பேசினர்.
பின்னர், புயல்—வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட தமிழக—ஈழ மக்களுக்கு சம்மேளனச் சார்பில், ரூ - 600 வழங்குவதென முடிவு செய்யப்பட்டதுடன், நிவாரணம் 'சாதி அடிப்படை'யில் நடைபெறுமல் அவதியுறும் மக்கள் அனைவருக்கும் சமமாக நடைபெற வேண்டுமென சம்பந்தப்பட்டவர்களைக் கேட்டுக்கொண்டும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

காரைக்குடியில் புயல் நிவாரணக் குழு

இந்நகரில் சர்வ கட்சிகளின் சார்பிலும் சேர்ந்து தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள தோழர்கள் சா. கணேசனை தலைவராகவும், அ. த அ. நடராசன் அவர்களை பொருளாளராகவும் கொண்ட சர்வகட்சி புயல் நிவாரணக் குழு நேற்றிலிருந்து புயலால் பாதிக்கப்பட்ட ஏழை மக்களுக்கு உதவு புரிய நகர் முழுவதும் சென்று நிதி திரட்டி வருகிறது.

அழகப்பா கல்லூரிகள் மீண்டும் திறக்கப்பட்டது

காரைக்குடி, டிச. 19—
அண்மையில் ஏற்பட்ட பலத்த புயல், மழையின் காரணமாக சேதப்பட்டிருந்த அழகப்பா கல்லூரிகளும், இவ்வூர் உயர்நிலைப் பள்ளிகளும் சுமார் 20 நாள் விடுமுறைக்குப் பின் இன்று மீண்டும் துவக்கப்பட்டது.

செய்திச் சுருள்

★

காரைக்குடியில் தி.மா.மு. கழகம் துவக்கம்

காரைக்குடி, டிச. 18—
நேற்று இந்நகர் தி. மு. கழக அலுவலகத்தில் திராவிட மாணவர் முன்னேற்றக் கழகத்தின் அமைப்புக் கூட்டம் தோழர் சுப. முத்துராமன் தலைமையில் மாலை 4 மணி அளவில் துவங்கியது.
அதுபோது நடைபெற்ற தேர்தலில் தோழர்கள் புவியரசன்—செயலாளராகவும், வணங்காமுடி—துணை செயலாளராகவும், தேவராசன்—பொருளாளராகவும், சி. டி. சிதம்பரம்—மாவட்டப் பிரதிநிதியாகவும், மற்றும் 8 பேர் கொண்ட செயலாளரகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.
மாணவர் கழகம் நாட்டுக்கு என்ன செய்ய வேண்டும்—எப்படி இயங்க வேண்டும் என்பது பற்றி தோழர்கள் சிலர் சொற்பொழிவாற்றினர்.
கூட்டத்தில், புயலினுல் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அனுதாபத்தைத் தெரிவித்தும், காலஞ்சென்ற டாக்டர் ஹீராஸ் அவர்களுக்கு அஞ்சலி செய்தும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது
காரைக்குடி மாணவர் கழகத்தையும் மத்தியக் கழகத்தோடு இணைத்துக்கொள்ள வேண்டுமென்ற தீர்மானமும் ஏகமனதாக நிறைவேறியது.

*   *   *

உடுமலையில் தி. மா. மு. கழக அமைப்பு

திராவிட மாணவர் முன்னேற்றக் கழகச் செயற் குழு உறுப்பினர்கள் கூடி, உடுமலையில் புதிய முறையில் வலிமையுடனும் நன்குசெயல்படும் முறையுடனும் வேண்டிய புதிய அமைப்புக் குழு ஒன்றைத் தேர்ந்தெடுத்துள்ளனர்.
உறுப்பினர்களாக 25 பேர்கள் விருப்பம் தெரிவித்தனர்; அவர்களில், செயலாளராக உ. வே. பாஸ்கரனும், துணைச் செயலாளராக கோ. மு. இளஞ்சேரனும், பொருளாளராக உ. தி. கிருட்டிணனும், துணைப் பொருளாளராகத் தங்கவேலுவும், விளம்பரச் செயலாளர்களாக பா. கவுஸ், பெ. நாச்சிமுத்துவும், மாவட்டப் பிரதிநிதிகளாக கலைமதி, உடுமலை-ச. நெடுஞ்செழியனும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

விருதுநகர் எம். எஸ். பெரியசாமி படிப்பகம்

11—12—55ல், படிப்பக நிர்வாகக் குழுக் கூட்டம் நடைபெற்றபோது, பேராசிரியர் இருதயராஜ் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்தும், தேவிகுளம், பீர்மேடு பகுதிகள் தமிழகத்துடன் இணைய வேண்டுமென்று கோரியும், தஞ்சாவூர், மதுரை, இராமநாதபுரம் மாவட்டங்களில் புயலினுல் பாதிக்கப்பட்டோருக்கு அனுதாபம் தெரிவித்தும், நிவாரண நிதிக்காக படிப்பகச் சார்பில் ரூ. 16 அளிப்பதென்றும் முடிவுகள் மேற்கொள்ளப்பட்டன.

புதுக்கோட்டையில் சிறப்புக் கூட்டம்

17—12—55 மாலை, அரசினரால் இங்கு நடத்தப்பெறும் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியின் தமிழ்ப் பெரு மன்றச் சிறப்புக் கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் இரத்தினவேலு, சண்முகசுந்தரம், இராமமூர்த்தி ஆகியோர் முத்தமிழின் இயல்—இசை—நாடகம் ஆகியன குறித்துச் சொற்பொழிவாற்றினர்.

பாராட்டு விழா

கோவில்பட்டி, டிச. 18—
லட்சுமி மில் தேர்தலில் காலனி கமிட்டி மெம்பராக வெற்றிபெற்ற தோழர் என். இராமசாமியைப் பாராட்டும் பொருட்டுஇன்று காலை 10 மணியளவில், மெயின் ரோடு சௌந்திரபாண்டியனுர் நினைவுப் படிப்பகத்தில், தோழர் அ. க. சி. பொன்னுசாமி தலைமையில் பாராட்டு விழாவும், தேநீர் விருந்தும் நடைபெற்றது. தோழர்கள் பலர் பாராட்டுரை வழங்கினர்.

ஆசிரியருக்குக் கடிதம்

சர்க்கார் கவனத்திற்கு!

ஐயா,
புயல் சமயத்தில் சென்னையிலேயே தங்கியிருந்து 'இது கடவுள் செயல்' என்று வேதாந்தம் பேசாமல், நேரில் பார்வையிட்டு, நீரிலும் குளிரிலும் நடுக்கமுற்று, திறந்த மார்பினராய், பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆறுதல் கூறிய முதலமைச்சர் காமராசர் நிச்சயம் பாராட்டுக்குரியவர்தான். ஆனல், இதற்காகக் காங்கிரசார்—குறிப்பாகக் காமராசர் ஆதரவாளர்கள் குதிக்க வேண்டியதில்லை; ஏனெனில், முதலமைச்சரின் முக்கிய கடமைகளில் ஒன்றுதான், அல்லலுற்றோருக்கு ஆறுதல் கூறுவதும்.
மக்கள் பணத்திலிருந்துதான் நிவாரணமளிக்கப்படுகிறது. அத்துடன் ரூ 100 கூடப் போதாது. ஆயினும், உடனடியாக ஒவ்வொரு குடும்பத்துக்கு ரூ 30 மட்டும் நிவாரணம் உடனடியாக அளிக்குமாறு உத்தரவிடுவதாகக் கூறிய மந்திரிகள் சென்னை சென்றதும், 'ரெவின்யூ போர்டு' அதிகாரியை அனுப்பி, அரசாங்க அலுவலர்களைக்கூட்டி, 'அதிகபட்ச வரம்பான 30 ரூபாயை எல்லோருக்கும் கொடுக்கக்கூடாது; இடிந்து தரைமட்டமான குடிசை ஒன்றுக்கு 10 அல்லது 15 ரூபாயோ கொடுக்கவேண்டும்' என்று உத்தரவிட்டுள்ளனர்.
அவர், 'பணத்தை வாரி வழங்கி கஜானாவைக் காலியாக்கிவிடாதீர்கள்,' என எச்சரித்துள்ளார்.
உத்தரவுப்படி நாங்கள் ரூ. 15 நிவாரணமளித்தால் பெரும்பாலோர் வாங்க மறுப்பதுடன், நாங்கள்தான் பாக்கி 15 ரூபாயை மோசடி செய்துவிட்டதாகக் குற்றம் சாட்டுகின்றனர்; காங்கிரஸ்காரரும் புகார் செய்கின்றனர், அவர்களுடைய சர்க்காரின் சொல்லுக்கும்-செயலுக்கும் வேறுபாடு அறியாதோர் போல!
நிவாரண உதவியின் பெரும் பகுதி பெட்ரோலுக்குத்தான் செலவாகிறது.

ஒரு அரசாங்க ஊழியர்
புதுக்கோட்டை

திருமணம்

18—12—55 காலை 10 மணியளவில் சென்னை சாலைவிநாயகர் கோவில் தெருவிலுள்ள நகராண்மைக் கழக ஆண்பள்ளியில் தோழர் இரா. கோதண்டராமன்—தோழியர் இர. வேதம் அம்மையார் திருமணம் தோழர் தி. ந. மதிவாணன் தலைமையில் நடைபெற்றது. மணமக்களைப் பாராட்டித் தோழர்கள் இரா. கலைச்செல்வன், கோபால், நடேசன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர். மணமக்கள் சார்பில் 'நம் நாடு' வளர்ச்சிக்காக ரூ. 1 அன்பளிப்பாகத் தரப்பட்டது — வரப்பெற்றோம் —நன்றி-பொறுப்பாளர்.

பிறப்பு

சென்னை வண்ணையம்பதி, கொல்லவார் அக்ரகாரம் ரோடு, எண். 76-லுள்ள தோழர் அ. மேகலிங்கம் அவர்கள் துணைவியார் தோழியர் சரோஜா அம்மையார் அவர்கள், 16—12—55ல் ஓர் ஆண் மகவுக்குத் தாயானர். தாயும் சேயும் நலம். இதன் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 3 அன்பளிப்புத் தரப்பட்டது—வரப்பெற்றோம்-நன்றி -பொறுப்பாளர்.

பெயர் சூட்டல்

சென்னை கோடம்பாக்கம் தோழர் சி. இராமச்சந்திரன் அவர்களது ஆண்மகவுக்கு 25-11-55ல் 'பாண்டியன்' என பெயரிடப்பட்டது. இதன் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 1 அன்பளிப்பாகத் தரப்பட்டது — வரப்பெற்றோம், நன்றி —பொறுப்பாளர்.

உணவுப் பொருள்கள் விலையேற்றம்

புயல்—வெள்ளக் கொடுமை காரணமாகிறது

சென்னை, டிச. 20—

தமிழ் நாட்டில் புயலும்—மழையும் விளைவித்த சேதங்களின் பலனாக அரிசி, பருப்பு வகைகள், எண்ணெய் வகைகள் முதலியவற்றின் விலை சிறிது ஏறியிருப்பதாகத் தெரியவருகிறது.

நல்லெண்ணெயின் விலை வீசை ஒன்றுக்கு ஆறு அணா முதல் ஏழணா வரையில் உயர்ந்திருக்கிறது—அதாவது, இப்போது வீசை விலை ரூ. 2-2-0 முதல், ரூ 2-3-0 வரை விற்கிறது; கடலை எண்ணெய் விலையும் இரண்டணா உயர்ந்திருக்கிறது; தேங்காய் எண்ணெய் விலையில் மாற்றம் இல்லை.

மத்தியப் பிரதேசம், ஐதராபாத் பகுதிகளிலிருந்து இறக்குமதியாகும் எள், அங்கு பயிர்கள் பலன் தராமையினால், விலை சிறிது ஏறியுள்ளதாயும் கூறப்படுகிறது.

எல்லா வகைப் பருப்பு, அரிசி இவற்றின் விலையும் சிறிதளவு உயர்ந்துள்ளன. இவை எல்லாம் கடந்த 15 நாட்களில் நிகழ்ந்துள்ளவை என்றும் தெரியவருகிறது.

இன்னும் இரண்டு கிழமைகளுக்கு இந்த நிலை நீடிக்கும் என்றும், பின் பழைய நிலைக்கு விலைகள் இறங்கும் என்றும் தெரியவருகிறது.

'ஐ.நா. திட்டங்களுக்கு ஏற்றதாக இல்லை'

காஷ்மீர் பற்றி குருஷ்சேவ் பேச்சு: காமன்ஸ் சபையில் கண்டனம்!

லண்டன், டிச. 19—

"ஐ. நா. பாதுகாப்பு சபையில் ஒரு பிரச்சினை பற்றி விவாதித்துக் கொண்டிருக்கையில், அப்பிரச்சினையைப் பாதிக்கும் வகையில் அறிக்கைகள் வெளியிடுவதோ, கருத்தறிவிப்பதோ கூடாது;

"காஷ்மீர் பற்றி ரஷ்யக் கம்யூனிஸ்டுக் கட்சி செயலாளர் குருஷ்சேவ், சமீபத்தில் தெரிவித்துள்ள கருத்துள்ள கருத்து, காஷ்மீர் பற்றிய ஐ. நா. தீர்மானங்களுக்கு சிறிதும் ஏற்புடையதாக இல்லை,"

என்று, பிரிட்டிஷ் அயல் நாட்டு அமைச்சர் அந்தோனி நட்டிங், காமன்ஸ் சபையில் கேட்கப்பட்டதோர் கேள்விக்குப் பதிலளிக்கையில் குறிப்பிட்டார்.

காஷ்மீர் பற்றி இந்தியாவுக்கும்—பாகிஸ்தானுக்கும் இடையே தகராறுகள் இருக்கும் போது, 'காஷ்மீர் இந்தியாவின் பகுதி—காஷ்மீர் மக்கள் இந்தியாவுடன் சேருவதற்குத் தீர்மானித்துவிட்டார்கள்' என்று, குருஷ்சேவ் கூறியிருப்பது விரும்பத்தக்கது அல்ல — என்ற பிரச்சினையை ஐ. நா. பாதுகாப்பு சபையில் பிரிட்டன் எழுப்ப வேண்டுமென்று தொழிற்கட்சி உறுப்பினர் ஒருவர் சபையில் வற்புறுத்தியுள்ளார்.

சென்னை—பெங்களூர் மெயில் விபத்து

22 பேர்களுக்குக் காயம்

பெங்களூரிலிருந்து சென்னைக்கு வந்து கொண்டிருந்த 'மெயில்' இரயில், மெயில்பட்டி எனும் இரயில் நிலையத்தில் சாமான்கள் வண்டி ஒன்றுடன் இன்று அதிகாலையில் மோதியதின் விளைவாக, 18 பிரயாணிகளும், 4 இரயில்வேத் தொழிலாளர்களும் சிறு காயம்பட்டனர் என்று தெரியவருகிறது.

இரயில் பாதைக்கு எவ்விதச் சேதமும் ஏற்படவில்லை என்றாலும், விபத்தின் விளைவாக இரயில் 136 நிமிடங்கள் தாமதிக்கவேண்டியிருந்தது என்றும், காயம்பட்டோருக்கு உடனே முதல் உதவி அளிக்கப்பட்டது என்றும் தெரியவருகிறது.

மாநில மாநாட்டு நிதியளிப்புக் கூட்டம்

★

21-12-55 மாலை 6 மணிக்கு, சென்னை-சிந்தாதிரிப்பேட்டை நேப்பியர் பார்க்கில், சென்னை சிம்சன் கம்பெனி தொழிலாளர்கள்—சென்னை சர்க்கார் பஸ் தொழிலாளர்கள் ஆகியோர் சார்பில், தி. மு. கழக மாநில மாநாட்டு நிதியளிப்புக் கூட்டம், தோழர் தி. மதிவண்ணன் தலைமையில் நடைபெறும். தோழர் மு. கருணாநிதி சொற்பொழிவாற்றுவார்.

சொற் பயிற்சிக் கூட்டம்

23-12-55 மாலை 6-30 மணிக்கு, சென்னை—முத்தியாலுப்பேட்டை, எண் 17, சாலைவிநாயகர் கோயில் தெரு, முத்தமிழ் மன்றத்தில், தோழர் இரா. தியாகராசன் தலைமையில் நடைபெறும். 'சமுதாயமும்—பொருளாதாரமும்' என்னும் பொருள் பற்றி மன்றத் தோழர்கள் பலர் பேசுவர்.

இராமநாதபுர மாவட்ட தி. மு. கழகக் கிளைச் செயலாளர்களுக்கு

"நமது மாவட்டத்தில் உறுப்பினர்கள் சேர்க்கும் பணியில் கிளைச் செயலாளர்கள் உடனடியாக ஈடுபட வேண்டுகிறேன். நகரக் கிளைகள், தாம் உறுப்பினர் சேர்க்கும் பணியில் ஈடுபட்டிருக்கும் விபரத்தையும், உறுப்பினராகப் பதிவு செய்துகொள்ள வேண்டிய முடிவு தேதியையும் பொதுமக்கள் பார்வைக்கு தென்படும்படியாக துண்டுப் பிரசுரங்கள் வெளியிட்டும், பெரிய போர்டுகளில் எழுதிவைத்தும் நன்கு விளம்பரம் செய்ய வேண்டுகிறேன்.

சென்ற ஆண்டுகளைவிட இந்த ஆண்டு உறுப்பினர்களை அதிகமாகச் சேர்க்க ஆக்கவேலைகளில் ஈடுபடும்படி வேண்டிக் கொள்வதுடன், ஆங்காங்குள்ள நமது மாவட்டச் சொற்பொழிவாளர்களும், பொறுப்பாளர்களும் கிளைச் செயலாளர்களுக்கு ஆர்வத்தையூட்ட வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்,"

என்று, இராமநாதபுரம் மாவட்ட தி. மு. கழகச் செயலாளர் இ. எஸ். எம். சௌந்திரபாண்டியன் அறிவிக்கிறார்.

கோவை நகர தி.மு.க. தோழர்களுக்கு வேண்டுகோள்

"நகரில் 1955—56-ம் ஆண்டுக்கு உறுப்பினர் சேர்க்கும் பாரங்கள் நகரில் உள்ள எல்லா வட்டாரக் கிளைகள், கழகத்தைச் சேர்ந்த படிப்பகங்கள், மன்றங்கள், நகர கிளையின் செயற்குழு உறுப்பினர்கள், மற்றும் நகரில் உள்ள முக்கியத் தோழர்கள் இவர்களிடம் தரப்பட்டிருக்கிறது. ஆங்காங்குள்ள தோழர்கள் உடனடியாக உறுப்பினராக பதிவு செய்து கொள்ள வேண்டுகிறேன்.

"நகரக் கழக அலுவலகத்தில் (தியாகராயர் படிப்பகம்) தினசரி மாலை 6 மணி முதல் 9 மணி வரையும், ஞாயிறன்று காலை 9 முதல் 12 மணி வரையும் வந்து பதிவு செய்துகொள்ள வசதி செய்யப்பட்டுள்ளது."

என்று, கோவை நகர தி. மு. கழகச் செயலாளர் சே. அ. ராசமாணிக்கம் அறிவிக்கிறார்.

சென்னை 41-வது வட்ட தி.மு.க. செயற்குழு உறுப்பினர்கட்கு

23-12-55 காலை 9-30 மணிக்கு, சென்னை-திருவல்லிக்கேணி, எண் 24, பழண்டியம்மன் கோவில் தெருவில், சென்னை 41-வது வட்ட தி. மு. கழகச் செயற்குழுக் கூட்டம் நடைபெறும்.

சேலம் நகர தி.மு.கழக கிளை செயலாளர்கட்கு

"பொதுச்செயலாளர் அறிக்கையின்படி புதிதாக உறுப்பினர்கள் சேர்க்கும் படிவங்கள் வந்துவிட்டன. ஒவ்வொரு வட்டக் கிளைக் கழகச் செயலாளர்களும், புதிதாகக் கிளைகளை அமைக்க விரும்பும் தோழர்களும் உடனடியாக படிவங்களைப் பெற்றுக் கொண்டு, துரிதமாக உறுப்பினர்கள் சேர்க்கும் பணியில் ஈடுபட வேண்டுமெனக் கேட்டுக் கொள்ளுகிறேன். படிவங்கள் வேண்டுவோர் நேரில் வந்து பெற்றுக்கொள்ளவும்,"

என்று, சேலம் நகர தி. மு. கழகச் செயலாளர் தோழர் ஈ. ஆர். கிருஷ்ணன் அறிவிக்கிறார்.

சேலம் மாவட்ட மாணவர்கட்கு

"நமது மாவட்டத்தில் திராவிட மாணவர் முன்னேற்றக் கழகம் நன்முறைப் பணியாற்றி வருவது பகிழ்ச்சிக்குரியதாகும். சேலம் மாவட்டம் மெங்கும் தி. மா. மு. கழகத்தின் கிளைகள் அமைக்கவும், மாவட்டக் கிளை அமைக்கவும், நமது இயக்க மாணவர்களை ஒன்று திரட்டி எதிர்கால ஆக்கவேலைகளுக்குத் திட்டமிடவும், சேலம் மாவட்டத்திலுள்ள நமது இயக்க மாணவர்கள் கூடிப் பேசுவது நலம் பயக்கும் என்று கருதுகிறேன்.

"மேற்கண்ட பிரச்சினைகள் பற்றி ஆராய 1—1 56 ஞாயிறு காலை 10 மணிக்கு, சேலம் நகரம் கிச்சிப்பாளையம் திராவிட முன்னேற்றக் கிளைக் கழகக் கட்டிடத்தில் நமது மாணவர்கள் கூட்டம் ஒன்று நடைபெறும். திராவிட மாணவர் முன்னேற்றக் றக் கழகத்தில் அன்பும், அக்கறையும் கொண்ட மாணவர்கள், மாவட்டத்தின் எல்லாப் பகுதிகளிலிருந்தும் கலந்து கொள்ளுமாறு அழைக்கிறேன்,"

என்று, சேலம் மாவட்ட தி. மா. மு. கழக அமைப்புக் குழு உறுப்பினர் தோழர் வி. சிவப்பிரகாசம் அவர்கள் அறிவிக்கிறார்.

சி. பி. சிற்றரசு

சுற்றுப்பயணம்

டிச. 23 களக்காடு
24 கருங்குளம்
25 திருநெல்வேலி
சந்திப்பு
26 வெள்ளங்குளி

உலக அரங்கில் திருவிளையாடல்கள்!

எகிப்தில் ஒரு அணை அமைக்க அமெரிக்கா-ரஷ்யா போட்டி

எகிப்தில் பெரிய அணையொன்று நிர்மாணிக்கப்படுவதற்குத் திட்டங்கள் தீட்டப்பட்டுள்ளது.

'ஆஸ்வான் அணை' என்று அது அழைக்கப்படும்; இத்திட்டம் நிறைவேற 15 ஆண்டுகளாகும்.

இதுவரையில் நிர்மாணிக்கப்பட்டுள்ள அணைகளுள் மிகப் பெரியதான அத்திட்டத்திற்கு 130 கோடி டாலரை எகிப்துக்குத் தந்துதவ பிரிட்டனும், அமெரிக்காவும் முன்வந்துள்ளன.

ரஷ்யாவும் முன்வருகிறது

இந்த அணையை நிர்மாணித்துத் தருவதற்கு ரஷ்யா உதவியளிக்கத் தயாராக இருக்கிறது என்று, சோவியத் சர்க்கார் கூறியுள்ளது. எகிப்து சர்க்கார் கேட்குமானால், அசல் திட்டப்படியே தாங்கள் உதவியளிக்கத் தயாரென்று ரஷ்ய அதிகாரி ஒருவர் கூறியுள்ளார்.

சவூத் மன்னரின் அன்பளிப்பு

தேசிய நிவாரண நிதியில் சேர்கிறது

புதுடில்லி டிச. 20—

பிரதமர் நேருவின் தேசிய நிவாரண நிதியிலிருந்து மேலும் ஒரு இலட்சம் ரூபாய் சென்னை சர்க்காருக்கு வழங்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

இதில் ரூ 50,000 சவூதி அரேபிய மன்னர் சவூத் அளித்தது என்று தெரியவருகிறது.

'வேலையின்மையைப் போக்க குடிசைத் தொழில்கள் அவசியம்'

கந்துபாய் தேசாய் கருத்து

"வேலையில்லாதோர் குழுவில் ஆண்டுதோறும் புதிதாக 18 இலட்சம் பேர் சேரக் கூடும்; எனவே, இந்தியப் பொருளாதாரத்தின் முக்கியப் பிரச்சினை 'வேலையின்மை' என்ற பிணியைத் தீர்ப்பதுதான்.

"இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ், 1½ கோடி பேர்களுக்கு வேலையளிப்பது இலட்சியமாகும்; இந்த இலட்சியத்தையொட்டி நோக்கினால், நகரப் பகுதிகளில் நிலவும் வேலையின்மை சம்பந்தப்பட்ட மட்டிலும்கூட, பெரிய ஆலைத் தொழில்கள் உருப்படியான பலன் எதையும் அளித்துவிட முடியாது; இந்நிலைமையில், கிராமாந்திரங்களில் நிலவும் வேலையின்மையைப் பற்றிக் கூற வேண்டியதேயில்லை.

"இந்தியாவைப் போன்ற ஒரு பெரும் நிலப்பரப்பில், வேலை கிடைக்காதவர்களுக்கு 'இன்ஷ்யூரன்ஸ்' பாதுகாப்பு அளிப்பதென்பது நடைமுறையில் இயலாததாகும். எனவே, பணியாற்ற முன்வரும் திடகாத்திரமானவர்கள் அனைவருக்கும் வேலை கிடைப்பதற்கான எல்லா வழிமுறைகளையும் மேற்கொள்ள வேண்டியது அவசியமானதாகும்.

"பெரும் ஆலைத் தொழில்களால் வேறு எவ்வித நன்மைகள் ஏற்படுவதாயிருந்தாலும், நாட்டில் இன்று நிலவும் வேலையின்மைப் பிரச்சினைக்கு நியாயமான அளவில் நிவாரணமளிப்பதற்குக் கூட நிச்சயமாக அவைகள் ஏற்ற சாதனமல்ல; இந்த நிலை ஒருபுறமிருக்க, சிறிய அளவிலும், கிராமாந்திர அடிப்படையிலும், கிராமப் பகுதிகள் முழுமையிலும் தொழில் வளர்ச்சிக்கு ஊக்கமளிக்காவிட்டால், நாடு முழுமையிலும் செழிப்பு வளரச் செய்ய இயலாது."

இவ்வாறெல்லாம், மத்திய சர்க்கார் தொழிலாளர் நல அமைச்சர் கந்துபாய் தேசாய், இதழ் ஒன்றில், நாட்டின் பொருளாதாரத்தில் சிறு தொழில்கள், குடிசைத் தொழில்களின் பங்கை விளக்கி எழுதுகையில், கருத்தறிவித்துள்ளார்.

அணு உலை மூலம் பாலைவனத்தில் ஒரு நகரத்தை உருவாக்கக்கூடும்!

நாகரீகம் தோன்றாப் பகுதிகளில் அணுசக்தி விளைவிக்கும் தோற்றம்

உலகத்தில் எந்த இடத்திற்கும் எடுத்துச் செல்லக் கூடிய அணு மின்சாரத் தொழிற்சாலை பற்றி விளக்கம்

'உலகத்தின் கீழ்க்கோடிகளில், தற்கால நாகரீகம் தோன்றுமாறு அணுசக்தி செய்துவிடும்; பாலைவனத்தில் அணு உலை ஒரு நகரத்தைத் தோற்றுவிக்கும்,'' என்று, அமெரிக்கக் கொலம்பிய பல்கலைக் கழகத்தின் எஞ்சினியரிங் பகுதியைச் சேர்ந்த ஜான் ஆர். டன்னிங், விஞ்ஞானிகள் மாநாடொன்றில் கூறியுள்ளார்.

மின்சாரம் உற்பத்தி செய்யும் அணுத் தொழிற்சாலை ஒன்றை அமெரிக்கா அமைத்துக் கொண்டிருக்கிறதாம்; அதை, ஒரு இடத்திலிருந்து மற்றோர் இடத்துக்குக் கொண்டு போகலாமாம்.

வழக்கமான முறைப்படி உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்தைக் காட்டிலும், இது உற்பத்தி செய்யக்கூடிய மின்சாரத்துக்கு மிகச் சிறிதுதான் விலை அதிகமாக இருக்குமாம்.

3,000 அணு விஞ்ஞானிகளும், எஞ்சினியர்களும், உற்பத்தியாளர்களும் கூடியுள்ள மாநாட்டில் இது பற்றி அறிவிக்கப்பட்டிருக்கிறது.

தூர இடங்களிலுள்ள அமெரிக்க இராணுவத்தின் உபயோகத்துக்காக வாஷிங்டனுக்கு அருகில் அமைக்கப்படும் அந்த அணு உலை 1957-ம் ஆண்டு துவக்கத்தில பணியாற்றத் துவங்கவேண்டுமென்று திட்டம் செய்யப்பட்டுள்ளதாம்; உலகத்தில் எந்த இடத்துக்கும் விமானத்தில் வைத்துக்கொண்டு போகக்கூடியதாக அது இருக்குமாம்!

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப் பெற்று, (24 சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா நெடுஞ்செழியன் எம்.ஏ.